# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.59/2022** **நாள் : 10.10.2022**

**ஈ.வெ.ரா பெரியார் நெடுஞ்சாலையில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் பிரதான குழாய் மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் பகுதி - 5க்குட்பட்ட இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை துறைமுக வளாகம் ஆகிய இடங்களில் 11.10.2022 காலை 10.00 மணி முதல் 12.10.2022 காலை 10.00 மணி வரை குடிநீர் விநியோகம் நிறுத்தம்**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் ஈ.வெ.ரா பெரியார் நெடுஞ்சாலையில் பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா அருகில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெறுகிறது.

இப்பணி நடைபெறும் இடத்தில் ஏற்கனவே உள்ள குடிநீர் கொண்டு செல்லும் 500 மி.மீ விட்டமுள்ள பிரதான குழாய் இட மாற்றம் செய்யப்பட உள்ளது. இப்பணிகள், 11.10.2022 காலை 10.00 மணி முதல் 12.10.2022 காலை 10.00 மணி வரை நடைபெறவுள்ளதால் பகுதி - 5க்குட்பட்ட இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை துறைமுக வளாகம் ஆகிய இடங்களில் குழாய் மூலமாக வழங்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மேலும், அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்காணும் அலுவலரை தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| பகுதிப் பொறியாளர் - 5 (இராயபுரம்)<br>கைபேசி எண்.8144930905 | இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை துறைமுக வளாகம். |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்